**கவனிக்க.**- *16.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1751 - 2012 මාර්තු මස 23 වැනි සිකුරාදා - 2012.03.23

*1751 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 338 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 344 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2012, மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*கீழே குறிப்பிடப்பட்ட கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் 2012.02.02 ஆந் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளது :-*

*கம்பனி பெயர்* : ஜீ. டி. ஐ. சதன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 83848
*விலாசம்* : இல. 22/பி, அபேகுணவர்தன மாவத்தை, பம்புரண, மாத்தறை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வை. எல். பீ. ஆர். கருணாதிலக்க,
உயர் நீதிமன்ற சட்டத்தரணி,
நிறுவன செயலாளர்.

3-812

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(2) இன்கீழ் பின்வரும் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது :-*

*கம்பனியின் முன்னைய பெயர்* : மேர்க்ஸ் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 1579
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 36, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10
*கம்பனியின் புதிய பெயர்* : டம்கோ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

டம்கோ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பாகவும்,

ஜேசீ மற்றும் கம்பனி,
செயலாளர்கள்.

3-847

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன் விதிகளுக்கு அமைய :-*

*கம்பனியின் பெயர்* : புரொபெர்ட்டி மாஸ்டெர்ஸ் டிவலொப்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 84460
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 9-1/1, டில் றோட் A, கொழும்பு 3

கம்பனி செயலாளர்.

3-789

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(2) இன்கீழ் பின்வரும் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது :-*

*கம்பனியின் முன்னைய பெயர்* : மேர்க்ஸ் லொஜிஸ்ரிக்ஸ் லங்கா சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 6520
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 36, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10
*கம்பனியின் புதிய பெயர்* : டம்கோ லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

டம்கோ லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பாகவும்,

ஜேசீ மற்றும் கம்பனி,
செயலாளர்கள்.

3-849

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) ஆம் விதிகளின்கீழ் பின்வரும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ள வாறு குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : சீ எஸ் ஏ ஒக்ஷன்ஸ் (தனியார்) நிறுவனம்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012.02.28
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 84583
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 164/2, ஹில் வீதி, தெஹிவளை

எக்கவுண்ட்டிங் அன்ட் எலைட் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

3-857

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது :-*

*கம்பனி பெயர்* : எலம்படர் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 15658
*முகவரி* : இல. 158, பேங்க்ஷால் வீதி, கொழும்பு 11
*புதிய கம்பனியின் பெயர்* : சில்வர் லைன் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

3-817/1

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது :-*

*கம்பனி பெயர்* : எம். எஸ். ஏ. டுவர்ஸ் அன்ட் ட்ரவெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 64619
*முகவரி* : இல. 158, பேங்க்ஷால் வீதி, கொழும்பு 11
*புதிய கம்பனியின் பெயர்* : எம். எஸ். ஏ. ட்ரவெல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனி செயலாளர்.

3-817/2

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 70, வஜிரா வீதி, கொழும்பு 4 இல் வசிக்கும் மன்சூர் சேக் அமீருட்டீன் ஆகிய நான், இல. 70, வஜிரா வீதி, கொழும்பு 4 இல் வசிக்கும் ஹொஸீமா சேக் அமீருட்டீன் என்பவருக்கு 1984.11.30 ஆந் திகதி வழங்கப்பட்ட இல. 459 உடையதும் கே. நீலகாந்தன் பிரசித்த நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான அற்றோணி தத்துவப்பத்திரம் இத்தால் செல்லுபடியற்றதாக்குகிறேன்.

எனவே, மேற்சொல்லப்பட்ட ஹொஸீமா சேக் அமீருட்டீன் என்பவருடன் இத்தத்துவப்பத்திரம் மூலம் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

மன்சூர் சேக் அமீருட்டீன்.

2012.02.17.

3-898

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 70, வஜிரா வீதி, கொழும்பு 4 இல் வசிக்கும் மன்சூர் சேக் அமீருட்டீன் ஆகிய நான், இல. 70, வஜிரா வீதி, கொழும்பு 4 இல் வசிக்கும் ஹுசைன் சேக் அமீருட்டீன் என்பவருக்கு 1984.11.30 ஆந் திகதி வழங்கப்பட்ட இல. 460 உடையதும் கே. நீலகாந்தன் பிரசித்த நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான அற்றோணி தத்துவப் பத்திரம் இத்தால் செல்லுபடியற்றதாக்குகிறேன்.

எனவே, மேற்கொள்ளப்பட்ட ஹுசைன் சேக் அமீருட்டீன் என்பவருடன் இத்தத்துவப்பத்திரம் மூலம் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

மன்சூர் சேக் அமீருட்டீன்.

2012.02.17.

3-897

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : இன்னவேஷன் ஷிப்பிங் லைன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 79269
*பதிவுத் திகதி* : 2011.06.07
*பதிவு முகவரி* : இல. 109, லெவல் 6, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10

3-886

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : சுரங்கி என்டபிரைசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 82925
*பதிவு முகவரி* : இல. 89/2, அரலிய மாவத்தை, மடபாத்த வீதி, கொலமுன்ன, பிலியந்தலை

3-895

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : எர்பென்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 84435
பதிவுத் திகதி : 2012.02.22
பதிவு முகவரி : இல. 90, பெரகும்பா மாவத்தை, கொலான்னாவ

மெனேஜ்மென்ட் அன்ட் பிசினெஸ்
அட்வைசரி சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.
பீவீ 259 கம்பனி செயலாளர்கள்.

3-884

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 இன் பிரகாரம் லங்கா பிளைற் சப்போர்ட் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 2012, சனவரி 31 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : லங்கா பிளைற் சப்போர்ட் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 84007
பதிவு முகவரி : த "வெவர்ரீ", இல. 141/9, வெக்ஷோல் வீதி, கொழும்பு 2

சபையின் கட்டளைக்கமைவாக,

கோப்பரேற் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
லங்கா பிளைற் சப்போர்ட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

3-887

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 242(3) இன் பிரகாரம் ஸ்கிரீன்லைன் கொக்கள (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஸ்கிரீன்லைன் எம்பெலிசேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியவைகளை இணைத்தல்**

ஸ்கிரீன்லைன் கொக்கள (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஸ்கிரீன்லைன் எம்பெலிசேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியனவற்றின் பணிப்பாளர் சபையானது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 242(1) இற்கு அமைவாக ஸ்கிரீன்லைன் கொக்கள (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஸ்கிரீன்லைன் எம்ஸிசேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டும் ஒரு தனி அமைப்பாக இணைக்கப்பட்டு செயற்படுவதுடன் இணைக்கப்பட்டுள்ள அமைப்பானது ஸ்கிரீன்லைன் எம்பெலிசியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என அழைக்கப்படும் எனவும் தீர்மானித்துள்ளது. இணைப்பு 2012, ஏப்பிறல் 30 ஆம் திகதி செயற்பட ஆரம்பிக்குமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்கிரீன்லைன் எம்பெலிசியர்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
தவிசாளர்.

2012, பெப்புருவரி 24.

3-888/1

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 242(3) இன் பிரகாரம் ஸ்கிரீன்லைன் கொக்கள (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஸ்கிரீன்லைன் எம்பெலிசேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியவைகளை இணைத்தல்**

ஸ்கிரீன்லைன் கொக்கள (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஸ்கிரீன்லைன் எம்பெலிசேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியனவற்றின் பணிப்பாளர் சபையானது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டபிரிவு 242(1) இற்கு அமைவாக ஸ்கிரீன்லைன் கொக்கள (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஸ்கிரீன்லைன் எம்பெலிசியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டும் ஒரு தனி அமைப்பாக இணைக்கப்பட்டு செயற்படுவதுடன் இணைக்கப்பட்டுள்ள அமைப்பானது ஸ்கிரீன்லைன் எம்பெலிசியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என அழைக்கப்படும் எனவும் தீர்மானித்துள்ளது. இணைப்பு 2012, ஏப்பிறல் 30 ஆம் திகதி செயற்பட ஆரம்பிக்குமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்கிரீன்லைன் கொக்கள (பிறைவேட்)
லிமிட்டெட்,
தவிசாளர்.

2012, பெப்புருவரி 24.

3-888/2

---

**அற்றோணி தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்**

கொழும்பு, வெள்ளவத்தை, பீட்டர்சன் ஒழுங்கை, இல. 11 இல் வசிக்கும் டொனல்ட் கருணாரத்ன அல்லது டொன் லலந்த நிர்மால் கருணாரத்ன (தேசிய அடையாள அட்டை இல. : 493102680 வீ இற்கு உரிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. டி. சீ. வீ. கருணாரத்னவினால் 2005.03.21 ஆந் திகதி அத்தாட்சிசெய்த 1350 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவப்பத்திரம் வாயிலாக வெல்லம்பிட்டியவில் உள்ள இல. 113 இல் வசிக்கும் ரோஹினி தேவப்பிரிய கருணாரத்ன வி/முன் பெரேரா என்பவரை எனது அற்றோணி தத்துவகாரராக நியமனம் செய்ததை இன்றிலிருந்து இரத்துச்செய்து செல்லாததாக்கிவிட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் சகல பொது மக்களுக்கும் அறிவிப்பு செய்வதுடன் இந்த அற்றோணி

தத்துவமூலமாக அவரால் இதன் பிறகு மேற்கொள்ளப்படும் எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் செயல்களுக்கும் நான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள மாட்டேன் எனவும் அறிவிப்பு செய்கிறேன்.

டொனல்ட் கருணாரத்ன அல்லது
டொன் லலந்த நிர்மால் கருணாரத்ன.

3-870

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9 இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : மெனேஜ்மென்ட் எலையன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 83683
பதிவுத் திகதி : 2012.01.13
பதிவு முகவரி : இல. 25-1/1, பியரதனராம வீதி, தெஹிவளை

3-863

---

### 2007 ஆம் ஆண்டு (சட்ட) கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242 இன் 7 ஆம் சரத்தின் (3) (பி) உப பிரிவின் அடிப்படையில் லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி பதிவிலக்கம் பீவீ 1134) மற்றும் சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி பதிவிலக்கம் பீவீ 6549) ஆகிய நிறுவனங்களுக்கிடையில் முன்மொழியப்பட்ட கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

#### லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்

2012, பெப்புருவரி 29 ஆந் திகதியன்று லிக்விட் மீடியா (பிறைவேற்) லிமிட்டெட்டின் சபைப் பணிப்பாளர்களும், சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் சபைப் பணிப்பாளர்களும் பிரிவு 242 (1) இன் அடிப்படையில் லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட் இனை சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் உடன் கூட்டிணைப்பதாக மேற்கொண்ட தீர்மானத்திற்கமைவாக, சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்ந்து செயற்படும் அதேவேளை லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்டின் செயற்பாடுகள் முற்றாக நிறுத்தப்படும்.

இந்த அறிவித்தல் வெளியாகிய தினத்திலிருந்து 20 நாட்களுக்குள் ளான தினமொன்றில் பிரிவு 242 (2) இற்கமைய பதிவாளர் நாயகத்தின் கூட்டிணைப்பு தொடர்பான சட்டத்திற்கமைய சான்றளிப்பு வழங்கப் படுதலின் பொருட்டு லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியன கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் கூட்டிணைவு தொடர்பான முன்மொழி வினையும் குறித்த சட்டத்தின் 243 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கமைய தேவையான ஆவணங்களையும் தாக்கல் செய்ததன் பின்னர் குறித்த இந்த கூட்டிணைவு செயற்படுத்தப்படும்.

லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய கம்பனிகளின் கூட்டிணைப்பு தொடர்பான தீர்மான அங்கீகரித்தலுக்கு ஏதுவாக விளங்கிய, குறித்த சட்டத்தின் பிரிவு 242 (4) இன் அடிப்படையிலான முன்மொழிவின் பிரதிகளை கம்பனியின் எந்தவொரு பங்குதாரர் மற்றும் கடன் வழங்குனர் மற்றும் நிறுவனம் கடமைப்பட்டுள்ள யாராயினும் தனிநபர் கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமான இல. 300, ஹவ்லொக் வீதி, கொழும்பு 5 என்ற முகவரியில் வழமையான வேலை நேரங்களில் பார்வையிட்டு ஆய்ந்தறிய முடியும்.

கம்பனியிடம் கோரிக்கை விடுக்கப்படுமிடத்து கம்பனியின் எந்தவொரு பங்குதாரர் மற்றும் கடன் வழங்குனர் மற்றும் நிறுவனம் கடமைப்பட்டுள்ள யாராயினும் தனிநபருக்கு கூட்டிணைவு முன்மொழி வின் பிரதியை இலவசமாக வழங்குவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்டின்
பணிப்பாளர்கள் சபைக் கட்டளைக்கமைய,

எஸ்ஜே கோர்ப்பரேட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

2012, மார்சு 1.

845/1

---

### 2007 ஆம் ஆண்டு (சட்ட) கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242 இன் 7 ஆம் சரத்தின் (3) (பி) உப பிரிவின் அடிப்படையில் லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி பதிவிலக்கம் பீவீ 1134) மற்றும் சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி பதிவிலக்கம் பீவீ 6549) ஆகிய நிறுவனங்களுக்கிடையில் முன்மொழியப்பட்ட கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

#### சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2012, பெப்புருவரி 29 ஆந் திகதியன்று லிக்விட் மீடியா (பிறைவேற்) லிமிட்டெட்டின் சபைப் பணிப்பாளர்களும், சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் சபைப் பணிப்பாளர்களும் பிரிவு 242(1) இன் அடிப்படையில் லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்டினை சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் உடன் கூட்டிணைப்பதாக மேற்கொண்ட தீர்மானத்திற்கமைவாக, சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்ந்து செயற்படும் அதேவேளை லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்டின் செயற்பாடுகள் முற்றாக நிறுத்தப்படும்.

இந்த அறிவித்தல் வெளியாகிய தினத்திலிருந்து 20 நாட்களுக்குள் ளான தினமொன்றில் பிரிவு 242 (2) இற்கமைய பதிவாளர் நாயகத்தின் கூட்டிணைப்பு தொடர்பான சட்டத்திற்கமைய சான்றளிப்பு வழங்கப் படுதலின் பொருட்டு லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும்

சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியன கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் கூட்டிணைவு தொடர்பான முன்மொழி வினையும் குறித்த சட்டத்தின் 243 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கமைய தேவையான ஆவணங்களையும் தாக்கல் செய்ததன் பின்னர் குறித்த இந்த கூட்டிணைவு செயற்படுத்தப்படும்.

லிக்விட் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய கம்பனிகளின் கூட்டிணைப்பு தொடர்பான தீர்மானங்களை அங்கீகரித்தலுக்கு ஏதுவாக விளங்கிய, குறித்த சட்டத்தின் பிரிவு 242 (4) இன் அடிப்படையிலான முன்மொழிவின் பிரதிகளை கம்பனியின் எந்தவொரு பங்குதாரர் மற்றும் கடன் வழங்குனர் மற்றும் நிறுவனம் கடமைப்பட்டுள்ள யாராயினும் தனிநபர் கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமான இல. 300, ஹவ்லொக் வீதி, கொழும்பு 5 என்ற முகவரியில் வழமையான வேலை நேரங்களில் பார்வையிட்டு ஆய்ந்தறிய முடியும்.

கம்பனியிடம் கோரிக்கை விடுக்கப்படுமிடத்து கம்பனியின் எந்தவொரு பங்குதாரர் மற்றும் கடன் வழங்குனர் மற்றும் நிறுவனம் கடமைப்பட்டுள்ள யாராயினும் தனிநபருக்கு கூட்டிணைவு முன்மொழிவின் பிரதியை இலவசமாக வழங்குவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

சிட்ரஸ் ஈவன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின்
பணிப்பாளர்கள் சபைக் கட்டளைக்கமைய,

எஸ்ஜே கோர்ப்பரேட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

2012, மாச்சு 1.

845/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : வரையறுக்கப்பட்ட எம் எஸ் ஏ ஷிப்பிங் (தனியார்) கம்பனி
கம்பனியின் இலக்கம் : பீவீ 17585
திகதி : 14.05.2000
முகவரி : இல. 158, பாங்சால் வீதி, கொழும்பு 11

கம்பனி செயலாளர்.

3-818

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : டினு ஈவர் ஸ்மில் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 81572
திகதி : 2011.09.28
முகவரி : இல. 615/1-ஏ, நீர்கொழும்பு வீதி, மாபோலை, வத்தளை

கம்பனி செயலாளர்.

3-819

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைவாக எஸ்ஏஎஸ் இன்டரக்டிவ் (பிறைவேட்) லிமிட்டெட் டானது 2012, பெப்புருவரி 22 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 84411
பதிவு முகவரி : இல. 33, சென். மைக்கல்ஸ் றோட், கொழும்பு 3

பணிப்பாளர்.

3-831

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனி பெயர் : கலம்பு இலக்ட்ரிக் இன்டெநெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 82787
பதிவு முகவரி : இல. 47/40, பெலன்வத்த, பன்னிப்பிட்டிய

3-832

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(2) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனி பழைய பெயர் : மிட்ஷெல் கன்சோட்டியம் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி புதிய பெயர் : ஸ்ரீலங்கா கேட்வே இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 79004
*பதிவுத் திகதி :* 2012.02.27
*பதிவு முகவரி :* இல. 10, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு 7

பணிப்பாளர்கள்.

3-833

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* கொழும்பு ட்ரொபிக்கல் பிஷ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* பீவீ 72601
*பதிவு முகவரி :* இல. 116/15, கமுனு மாவத்தை, கிரிபத்கொடை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2010.06.08

கோப்பரேட் அட்வைசரி சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

3-844

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

இலக்கம் 447, மாம்பே வடக்கு, கொழும்பு வீதி, பிலியந்தலை என்ற முகவரியில் வசிக்கும் மாப்பிற்றியகே டொன் சந்தரலால் சாந்திகுமார் பெரேரா (தேசிய அடையாள அட்டை இல. 531594096வீ) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு குணசிறி கொடிதுவக்கு என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 920 ஆம் இலக்கமும் 2006, மாச்சு 1 ஆந் திகதி உடையதும், இலக்கம் 105/2, நம்பாமுனுவ, பிலியந்தலை என்ற முகவரியில் வசிக்கும் 521251190வீ என்ற தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவராகிய தேவகே அல்லது கத்திரியாராச்சிகே சந்திரரத்ன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கிவிட்டேன் எனவும் மேற்குறிப்பிட்ட தேவகே கத்திரியாராச்சிகே சந்திரரத்ன என்பவரினால் எனக்காக அல்லது எனது சார்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்கின்றேன்.

மாப்பிற்றியகே டொன் சந்தரலால் சாந்திகுமார் பெரேரா.

3-846

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றோம் :-

*கம்பனி பெயர் :* இன்பினிட்டி குளொபல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 84289
*பதிவு முகவரி :* இல. 40/1, பெரேரா மாவத்தை, தலங்கம சவுத்

பணிப்பாளர் குழுவினரின் உத்தரவிற்கிணங்க.

3-902

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றோம் :-

*கம்பனி பெயர் :* பி அன்ட் எஸ் பிசினெஸ் ஸ்டெடஜீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 84264
*பதிவு முகவரி :* இல. 40/1, பெரேரா மாவத்தை, தலங்கம சவுத்

பணிப்பாளர் குழுவினரின் உத்தரவிற்கிணங்க.

3-900

---

## விசேட அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

கடவத்தை, இஹலகாகஹமுன, விசும்புரய 300/1 இல் வசிக்கும் கனெஹி ஆரச்சிகே சந்த மங்கல கனேஹி ஆரச்சி ஆகிய நான், 2003.06.26 இல் விசேட அற்றோணி அதிகாரப்பத்திரப் பிரதி 259, பந்தி 117, 8294 ஆம் பதிவு மற்றும் 2003.07.31 ஆந் திகதி கனெஹி ஆரச்சிகே மஹேந்திர லங்காதிலக்க கனெஹி ஆரச்சிக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை இத்துடன் இரத்துச்செய்து வலுவிழக்கச் செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்துடன் அறியத்தருகிறேன்.

கனெஹி ஆரச்சிகே சந்த மங்கல கனேஹி ஆரச்சி.

3-918

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தலை இத்தால் தருகின்றோம் :-

*கம்பனி முன்னைய பெயர் :* டெல்மேஜ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 6351
*பதிவுசெய்யப்பட்ட கம்பனியின் முகவரி :* இல. 101, வினயலங்கார மாவத்தை, கொழும்பு 10
*கம்பனியின் புதிய பெயர் :* டெல்மேஜ் லிமிட்டெட்

கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி டபிள்யூ கோப்பரேட் செக்ரட்டேரியல் (பிவிரி) எல்ரிடி,
கம்பனி செயலாளர்கள்.

3-917

# ஏல விற்பனைகள்

**டிஎப்சீசீ வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**255 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

**அலகு/பகுதி : எக்ஸ்ஏ/எப்2/யூ4, 2 ஆம் தட்டு (3 மாடிகள்)**

**வரிமதிப்பு இல. : 608/2/4 (முன்னைய வரிமதிப்பு இல. 608/2/4) கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை**

**இடம் : அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் காமினி பி தொடன்வெல அவர்களால் வரையப்பட்ட, 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 5195 ஆம் இலக்க மாடிக் குடியிருப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டடத்தின் 2 ஆம் மாடி அலகு/பகுதி : எக்ஸ்ஏ/எப்2/யூ4 (சீ வகை)**

**வதிவிட வீட்டுப் பிரிவில் உள்ள அலகு/பகுதிகள் : இரண்டு படுக்கை அறைகள், வரவேற்புக் கூடம், சாப்பாட்டு அறை, இரண்டு கழிப்பறைகள், சமையலறை, பொதுப் பாவனை அறை, மாடி, வாசல் பகுதி**

**பொதுப் பாவனைப் பிரதேசம் : சீஈ51**

**அந்த அலகு/பகுதியின் நிலமட்டப் பரப்பளவு : 75 சதுர மீற்றர்கள்**

**பகிர்வுப் பெறுமதி ஒதுக்கீடு : 53**

**பொதுவான அம்சங்கள் :**

**1. மாடிக்குடியிருப்பு சொத்தின் உத்தியோகபூர்வ பொது அம்சங்கள் :**

(i) **மாடிக்குடியிருப்பு சொத்திற்கு சேர்மதியான திறந்தவெளி உட்பட கட்டிடம் அமைந்துள்ள காணி**

(ii) **அடிக்கல், தூண்கள், கேடர்கள், பீம்கள், முண்டுகள், பிரதான சுவர்கள், கட்டடத்தின் கூரை**

(iii) **மின் விநியோகம், தொலைபேசி, வானொலி, ரிடிபியூஷன், தொலைக்காட்சி, நீர் விநியோகக் குழாய், நீர்த்தாங்கி, நீர் கொள்கலன், மேல் நீர்த்தாங்கி, நீர் இறைக்கும் நிலைய உபகரணங்கள், கழிவு நீர்க்குழாய், கழிவுநீர் சந்தி, கழிவுப்பொருள் தொட்டி போன்ற மத்திய சேவைகள்**

(iv) **மேற்குறிப்பிட்ட சொத்தின் நிலைப்பாடு, பராமரிப்பு, பாதுகாப்பு அல்லது பொதுவான பாவனைக்கு தேவையான ஏனைய சகல வசதிகளும் பொருட்களும்**

**2. 255 ஆம் இலக்க பிணை உறுதியில் உள்ள அட்டவணையில் மேலும் விபரிக்கப்பட்ட பொதுவான அம்சங்களும்.**

*(பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். அபேவிக்கிரம அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 5 ஆந் திகதியிடப்பட்ட 255 ஆம் இலக்க முதன்மை பிணை உறுதி மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசில் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த, மாத்தறையில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள (இதன் பின்னர் கம்பனி என அழைக்கப்படும்) சமந்த ஜயவிக்கிரம அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டிஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 12% வற் வரி (பன்னிரண்டு சதவீதம்) ;
(3) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(4) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(5) மொத்த விளம்பரச் செலவான ரூ. 60,000 ;
(6) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டிஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்புகொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது"

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட நூற்றாண்டுக்கும்
மேல் மக்கள் நன்மதிப்புப் பெற்ற, இலங்கையின்
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித்தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5 |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 2585408 |
| தொ./ ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

3-927

---

**டிஎப்சீசீ வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி டிஎப்சீசீ வங்கி மூலம் பெறுமதிமிக்க ஆதனம் ஏலவிற்பனை*

**இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு டி. எம். பி. சீ. குணதிலக்க 2006.08.28 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய டிஎப்சீசீ வங்கி சார்பாக முறி இலக்கம் 3507 இல் சொல்லப்பட்ட காணியின் விபரம் :**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து ஏவகம கோரலயில் மாலம்பே கிராமத்தில் உள்ள நிலஅளவையாளர் ஆர். ஏ. சிறிசேன 2006.05.20 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1056 இல் காண்பிக்கப்பட்ட கல்பொத்தவத்த அல்லது பெலண்கா வத்த காணியின் லொட் 1 மற்றும் இக்காணியில் உள்ள மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து**

**இக்காணியின் விஸ்தீரணம் : (0ஏ. 1றூ. 7.32பே.)**

*(நொயல் மெட்டல் கிரஸ்ச்சர்ஸ் (CRUSHERS) மற்றும் கம்பனி பெயரில் வியாபாரம் செய்யும் அந்தோனி எட்டிகே நொயல் சமரவீர மேற்படி காணியை டிஎப்சீசீ வங்கிக்கு ஈடுவைத்துள்ளார்.)*

2012, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாகச் ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01%;
(3) ஏலதாரரின் தரகு பணம் 2.5%;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் நீதியாக செலுத்தவேண்டிய கட்டணங்கள் வரிக் கொடுப்பனவுகள் சேர்த்து மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் சொல்லப்படும் மற்றைய கட்டணங்களைச் சேர்த்து செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- டிஎப்சீசீ வங்கி தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 011-2442442.

எல். பி. சேனநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுபவர், நீதிமன்ற ஆணையாளர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி : 011-3144520.

3-862

---

**செலான் வங்கி பீ.எல்.சீ. – எம்பிலிபிட்டிய கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

**சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் கொலன்னே கோரளை, கொலன்னே கம்பத்து எல இகலவில் அமைந்துள்ள "கும்புறேகொடகாவஹென மற்றும் வர்ஸ்ஸமானஹே வத்த (எல இகலவத்தயின் ஒரு பிரிவு)" என அறியப்பட்டு அழைக்கப்படுகின்ற காணி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் என். களுபகன என்பவரால் 2004.12.01 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2274 இல் துண்டு 30 சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ளதுடன் அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) அல்லது 0.0506 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் வீதி குறிப்பு துண்டு 33 இல் குறிக்கப்பட்டுள்ளது.**

**மேற்கூறப்பட்ட துண்டு பிரித்து அறியப்பட்டுள்ள பகுதியின் பின்வரும் குறிப்பில், எல இகலவில் அமைந்துள்ள "கும்புறேகொடகாவஹென மற்றும் வர்ஸ்ஸமானஹேவத்த (எல இகலவத்தயின் ஒரு பிரிவு)" என அறியப்பட்டு அழைக்கப்படுகின்ற காணி, அனுமதி பெற்ற நிலஅளவையாளர் ஏ. இரட்னம் என்பவரால் 2004.07.13 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 582/04 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டுள்ளதுடன் ஒன்று தசம் ஐந்து மூன்று (1.53) ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் தலைப்பு/ பரிமாணம் ஜீ62/212 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

*("கடன்பட்டோர்" என்ற வகையில் விஜேரியவைச் சேர்ந்த கன்காணிஹே உதயகுமார நிமால் விஜிதானந்த என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்ட சொத்தை 2012, ஏப்பிறல் 26 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** எம்பிலிபிட்டிய உடகம சந்தியிலிருந்து கொலன்ன வீதி மார்க்கமாக 24 கி. மீ. தூரத்திலுள்ள

கொலன்ன சந்தை வரை செல்லவும். பின்னர் வலதுபுறத்தில் உள்ள மச்சலிந்தாராம வீதியால் திரும்பி 300 மீ. தூரத்தில் இடது பக்கமாக உள்ள 12 அடி அகலமான பாதையால் 30 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் வலதுகைப் பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2010.03.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2010.03.13 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'' மற்றும் ''லங்காதீப'' பத்திரிகைகளையும், 2010.03.25 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்கு பதிலாக அரசினால் அல்லது உள்ளூர் அதிகார வளங்களினால் விதிக்கப்பட்ட அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்குரிய உள்ளூர் விற்பனை வரி அல்லது ஏனைய வரி) ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/ 2%) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''உதவி பொது முகாமையாளர் (சட்டம்), சிலிங்கோ செலான் டவர், செலான் வங்கி பீ.எல்.சீ., இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' இடமிருந்து பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456477, 2456486.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி இல.: 011-3068185, 011-2572940.

2-860

---

### பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், வட்டார இல. 46-பாமன்கடை மேற்கு, ருத்திரா மாவத்தை வழியே அமைந்துள்ளதும் ருத்ரா மாவத்தை, வரிமதிப்பு இல. 29 ஐக் கொண்டதும் ''நுககஹவத்தை'' (தொகுதி 129 பக்கம் 261 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள வெள்ளவத்தை பதிவு வரைபடம் இல. 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 1824 இன் உப பிரிவாக்கப்பட்டு ஒரு மீள் நிலஅளவையாக இருக்கின்ற) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990, யூன் 15 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2798 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 3040 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ;**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 9.67பே.)**

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், வட்டார இல. 46-பாமன்கடை மேற்கு, ருத்திரா மாவத்தை வழியே அமைந்துள்ளதும் ருத்ரா மாவத்தை, வரிமதிப்பு இல. 29 ஐக் கொண்டதும் ''நுககஹவத்தை'' (தொகுதி 129 பக்கம் 261 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள வெள்ளவத்தை பதிவு வரைபடம் இல. 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு 1824 இன் உப பிரிவாக்கப்பட்டு ஒரு மீள் நிலஅளவையாக இருக்கின்ற) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990, யூன் 15 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2798 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 3041 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ;**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 8.67பே.)**

#### ஏல விற்பனை

(லேன்ட் மார்க் எஞ்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, பெப்புருவரி 7 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1956 மற்றும் 2006, பெப்புருவரி 6 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1954 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது.)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- வெள்ளவத்தை சந்தியிலிருந்து (சைகை விளக்கு சந்தி) காலி வீதி வழியே தெஹிவளை நோக்கி வெள்ளவத்தை, வர்த்தக வங்கி வரை ஏறக்குறைய 250 மீற்றர் சென்று, ருத்ரா மாவத்தைக்கு இடப்பக்கம் திரும்பி ருத்ரா மாவத்தையின் இடப்பக்கத்தில் அமைந்துள்ள இவ்வாதனங்களை அடைவதற்கு ஏறக்குறைய 125 மீற்றர் செல்லவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங்களை 2012.04.17 ஆந் திகதி முறையே மு. ப. 10.30 மணிக்கும் மு. ப. 11.30 மணிக்கும் அவ்வவ்விடங்களில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2010, ஏப்பிறல் 9 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2010, ஏப்பிறல் 9 ஆந் திகதிய ''டெய்லி நியுஸ்'', ''லக்பிம'' மற்றும் ''சுடர் ஒளி'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும், "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சிரேட்ட முகாமையாளர் - சட்ட சம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2565573, 2565565.

சிறியாணி மனம்பேரி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
தரகர் மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

"எம். எஸ். ஒக்ஷன்ஸ்",
இல. 9, பெல்மொண்ட் தெரு,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-2320074 மற்றும் 0713-151356.

3-861

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.